**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்**

**அ.வ.எண் 231/2015**

2023ம் ஆண்டு அக்டோபர் மாதம் 07–ம் நாள் சனிக்கிழமை பி.வா.சா.8

சாட்சியின் சாட்சியம் திரு.V.ஜான்மினோ,B.A.,B.L., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஈஸ்வரி | தொழில் | : |
| க/பெ | : பொன்னுசாமி | கிராமம் | : |
| வயது | : | தாலுகா | : |
| ஜாதி | : | மாவட்டம் | : |
| சமயம் | : | | |

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு**

**முதல் விசாரணை தொடர்ச்சி:**

16ம் பிரதிவாதி ஈஸ்வரிக்கு சுப்பராயன் எழுதிக்கொடுத்த கிரயப்பத்திரம் சார்பதிவாளர் அலுவலக ஆணை எண். 2499/1988ன் சான்றளிக்கப்பட்ட நகல் வா.சா.ஆ 21. வாதி சொத்துவரி செலுத்திய ரசீதுகள் எண்ணிக்கை – 2 வா.சா.ஆ 22, வாதி குடிநீர்க்கட்டணம் செலுத்திய ரசீதுகள் எண்ணிக்கை – 2 வா.சா.ஆ 23, வாதி மின்கட்டணம் செலுத்திய ரசீது வா.சா.ஆ 24.

**2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை:**

இல்லை.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

தாவா சொத்துக்கள் A.R சடகோபால் நாயுடுவிற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். சடகோபால் நாயுடு 24.02.1981 ல் காலாமாகிவிட்டார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. சடகோபால் நாயுடுவின் மனைவியை தெரியுமா என்றால் தெரியும். நாங்கள் இடம் வாங்கி வீடு கட்ட சொத்திற்கு சென்றபோது அவர் அங்கு இருந்தார். சடகோபால் நாயுடுவின் மனைவியான கெஜலட்சுமி (எ) கனகவல்லி தாயார் 22.01.2004ல் இறந்துவிட்டார் என்றால் அவர் இறந்தது தெரியும் தேதி தெரியாது. கஜலட்சுமிக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் அவரது மகன் சுப்பராயனை

மட்டும்தான் எனக்கு தெரியும். கெஜலட்சுமி (எ) கனகவல்லி தாயாரின் மகள் சுசீலாவை தெரியுமா என்றால் தெரியாது. சுசீலாவின் மகன் வாதியை தெரியுமா என்றால் தெரியாது. வாதியின் தாயார் திருமதி. சுசீலா 29.12.2007ல் இறந்துவிட்டார் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கெஜலட்சுமி (எ) கனகவல்லி தாயாரின் 2வது மகள் 3ம் பிரதிவாதி கலாவதியை தெரியுமா என்றால் இடத்தை வாங்கும்போது எனக்கு தெரியாது, நாங்கள் இடம் வாங்கி 8 வருடம் கழித்துதான் அவரைபற்றி எனக்கு தெரியவந்தது. 1ம் பிரதிவாதி சுப்பராயன் மனைவி 2ம் பிரதிவாதியை நான் இடம் வாங்கும்போது தெரியாது அதற்கு பின்னர்தான் தெரியும். 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கு வாரிசுகள் இல்லை என்றால் சரிதான். 4 மற்றும் 5 பிரதிவாதிகள் சசிரேகா, மகாலட்சுமி யை பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் கிரயம் பெற்ற சொத்தை பற்றி எனக்கு முழுவிவரம் கிரயம் வாங்கும்போது தெரியுமா என்றால் எனது கணவர்தான் அந்த பொறுப்பை பார்த்துக்கொண்டார். சடகோபால் நாயுடு மற்றும் கெஜலட்சுமி (எ) கனகவல்லி தாயாரின் இறப்பு சான்றிதழ்களை பார்த்துத்தான் நாங்கள் சொத்தை கிரயம் பெற்றோம் என்றால் அந்த விவரங்கள் முழுமையாக எனது கணவருக்குதான் தெரியும். தாவா சொத்திற்கு வில்லங்கள் ஏதாவது உள்ளதா என்று நாங்கள் வில்லங்கசான்றிதழ் போட்டு பார்த்தோமா என்றால் நான் போட்டு பார்க்கவில்லை எனது கணவர் வில்லங்க் சான்றிதழ் போட்டு பார்த்தாரா என்பது எனக்கு தெரியாது. தாவா 1வது அயிட்ட சொத்தின் ஒரு பகுதி பி.வா.சா.ஆ 21 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா 1வது அயிட்ட சொத்து பிரிக்கப்படாத சொத்து என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. நிரூபணவாக்குமூலத்தில் நான் எங்கு வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் டைப்ரைட்டிங் இன்ஸ்டியூட்டில் வைத்து நான் கையொப்பம் செய்தேன். தாவா சொத்திற்கு அருகில் காலி இடங்கள் இன்னும் உள்ளதா என்றால் உள்ளது. நான் சொத்தை அனைத்து வாரிசுகளின் கையெழுத்து இல்லாமல் கிரயம் பெற்றுள்ளதால் அது செல்லாது என்றால் சரியல்ல. சொத்தின் அனைத்து வாரிசுகளையும் எனக்கு தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சுப்பராயலு சொத்தின் வாரிசு என்று கூறியதால் நாங்கள் சொத்தை வாங்கிக்கொண்டோம். சடகோபால் நாயுடுவின் வாரிசுகள் அனைவரிடமும் நாங்கள் கையெழுத்து பெறாததால் பி.வா.சா.ஆ 21 செல்லாது என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ 21க்கு பிற்பாடு ஏற்பட்ட ஆவணங்கள் வாதியை கட்டுப்படுத்தாது என்று

சொன்னால் அது சரியல்ல. 1ம் பிரதிவாதியை தவிர சடகோபால் நாயுடுவின் மற்ற வாரிசுகளை பி.வா.சா.ஆ 21 கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி அவரது பாக சொத்துக்களை விட அதிகமான சொத்துக்களை விற்பனை செய்துவிட்டதால் பி.வா.சா.ஆ 21 செல்லாது என்று சொன்னால் மற்ற சொத்துக்களை பற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ 21 செல்லும். சடகோபால் நாயுடுவின் வாரிசுகளான வாதியையும் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதியை மட்டும்தான் சொத்தை கிரயம் பெறும்போது எனக்கு தெரியும்.

**3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

வாதி தரப்பு குறுக்குவிசாரணை ஏற்றுக்கொள்ள கேட்கப்பட்டு ஏற்கப்பட்டது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

ஒம் /திரு.வி.ஜான்மினோ, பி.ஏ.,பி.எல்/
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.